(ஊ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 21/70)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, " தமிழ் நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா *(சட்டப் பேரவை மசோதா எண் 21/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRU A. A. SUBBA RAJA: Sir, I move the following amendment—

"That the Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 21 of 1970) be referred to a Select Committee consisting of . . . . Members of the Assembly". (Names to be furnished later).

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் 21-வது இனத்தின்கீழ் குறிக்கப்பட்டுள்ளவை இரசாயன உரப் பொருள்களாகப் பயன்படும்பொழுது ஒரு முனை வரியாகவும் இராசயன உரப் பொருளாகவன்றி வேறு விதத்தில் பயன்படும் பொழுது பல முனை வரியாகவும் தற்போது விதிக்கப்படுகின்றன. இதனால் வணிகருக்கு இடர்ப்பாடு ஏற்படுகிறது. மசோதாவில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தின்படி " இரசாயன உரம் " என்ற சொற்கள் 21-வது இனத்திலிருந்து நீக்கப்படுவதால் இந்த இடர்ப் பாடு அகற்றப்படுகிறது.

மேலும், 1957-ஆம் ஆண்டு உரக் கட்டுப்பாடு ஆணையில் குறிப் பிட்டுள்ள சில உரங்கள் தற்போதுள்ள 21-வது இனத்தில் குறிப்பிடப் படவில்லை. உரக் கட்டுப்பாடு ஆணையில் குறிப்பிட்டுள்ள எல்லா இனங்களையும் 21-வது இனத்தின்கீழ் விவரிப்பதற்கு இம்மசோதா வகைசெய்கிறது.

தற்போது முதல் விவர அட்டவணையின் 21-வது இனத்தில் 1 முதல் 15 இனங்களில் குறிக்கப்பட்டுள்ள இரசாயன எரு இனங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இனங்களையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை எருவினங்களையும் கலந்த எருக்கலவை, அக்கலவையில் சேர்ந்த சில இனங்களுக்கு ஏற்கனவே வரி விதிக்கப் பட்டிருந்தபோதிலும், ஒரு தனிப்பட்ட இனமாகக் கருதப்பட்டு 3½ சதவீதத்தில் ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. இவ்வாறாக இரட் டிப்பு வரி விதிக்குள்ளாகிறது. ஆனால், இம்மசோதா எருக் கலவைத் தயாரிப்பாளர்கள் அக் கலவையில் உள்ள ஏற்கனவே வரி விதிப்புக்குள்ளான இனங்களின் மீது மறுபடியும் வரி செலுத்தாம லிருப்பதற்கு வகை செய்கிறது. இது எருக்கலவை தயாரிப்பாளருக்கு அளிக்கப்படும் சலுகையாதலால், வாணிபம் இதை வரவேற்கும் என் பதில் ஐயமில்லை.

---

* 28—8—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

1970 செப்டம்பர் 5] [திரு. ப. உ. சண்முகம்]

இந்த மாற்றங்கள் மேற்படி சட்டத்தில் 59-வது பிரிவு (1)-வது உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் 1970 ஆகஸ்ட் 6-ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 59-வது பிரிவைச் சேர்ந்த (2)-வது உட்பிரிவின் கீழ் மேற்குறிப்பிட்ட அறிவிப்புக்குப் பதிலாக மசோதா ஒன்றை தற்போதைய சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவர வேண்டும்.

இம்மன்றப் பேரவை முன் இப்போது வைக்கப்பட்டுள்ள இம் மசோதா இது குறித்து அவசியமான விதித் துறைகளைக் கொண் டுள்ளது. இம்மசோதாவை ஏற்குமாறு இம்மன்றப் பேரவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, இந்த மசோதா வின் உள்நோக்கம், இதனுல் என்ன நன்மைகள் பெறப்படுகின்றன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னூர்கள். இதை ஏன் ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறோம் என்றால், ஃபார்ஸ்ட் ஷெட்யூலில்,

"அம்மோனியம் ஸல்பேட், அம்மோனியம் ஸல்பேட் நைட்ரேட் ......" என்று இப்படியாக 21 வரையில் அதில் சேர்க்கப்பட்டிருக் கின்றன. விவசாயிகளுக்குத் தேவைப்படும் அல்லது உபயோகப்படும் பல பொருள்கள் இதிலிருந்து விடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு இன்று பல முனை விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகிறது என்று தெரி கிறது. அவற்றைப் பற்றியும் ஆலோசித்துப் பார்த்து இந்தப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் ஒரு இடத்திலேயே ஒரு முனை வரி போடக்கூடிய வகையில் ஆலோசித்து அந்தப் பொருள்களையும் இவைகளோடு சேர்க்க வேண்டும் என்று நினைக்கிற காரணத்தினுல் தான் இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறேன். "க்ரீன் ரெவல்யூஷன்" நடக்கிறது என்று சொல்கிற நேரத்தில் விவசாயிகளின் நன்மைக்காகவும், உற்பத்தியைப் பெருக்கு தற்காகவும் இவைகளில் ஆர்வம் கொண்டுள்ள இந்த அரசாங்கம் விவசாயிகளுக்குப் பயன்படும் பல்வேறு பொருள்களையும் இந்த ஷெட்யூலின் கீழ் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். "பெர்டிலைஸர்ஸ்"-ன் கீழ் பல விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவற்றைப்பற்றி யெல்லாம் ஆலோசிக்க வேண்டும் என்பதற்காகத் தான் இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்று கோரு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கனவே ஒரு முனை வரி கட்டப்பட்டு கலப்புரம் ஆக்கப்பட்டால் அதற்கும் வரி உண்டு என் பதை மாற்றி ஏற்கனவே ஒரு உரத்திற்கு வரி கட்டப்பட்டிருந்தால் கலப்புரமாக அதைக் கொண்டு வரும்போது அதற்கு வரி கட்டத் தேவை இல்லை என்ற சலுகையை அளிக்கும் திருத்தமாகும் இது. விவசாயிகளுக்கும், உரக்கலப்பாளர்களுக்கும் இது நன்மை பயப்ப தாகும். ஆகவே இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் அவர்களது திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 21/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, பிரிவு 1 முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: "இம்மசோதா நிறை வேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்ட மாக நிறைவேற்றப்பட்டது.

(எ) தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (நான்காம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 21/70)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா *(சட்டப் பேரவை மசோதா எண் 22/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழி கிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி, மேற்படி சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் கண்டுள்ளவையும், அந்த விவர அட்டவணையில் சொல்லியுள்ள வேறு எவையேனும், சரக்குகளைத் தயாரிப்பதில் உதிரிப் பாகங்களாகப் பயன்படுத்தும் சரக்குகளின் விற்பனை மீது இரண்டு சதவீத சலுகை வீதத்தில், வரி விதிக்கப்படு கிறது. மேற்படி சட்டத்தில் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரி வில் கண்ட விளக்கத்தில் மேற்படிச் சலுகை வீதம் கிடைக்க வேண்டு மானால், வேலை நிறைவு பெற்ற பொருளில் அந்த உதிரிப்பாகம் அடை யாளங்கண்டு கொள்ளத்தக்க பாகமாக அமைய வேண்டும். எந்த வொரு உதிரிப்பாகம் தனியாக அடையாளம் கண்டு கொள்ளத்தக்க தாக இருந்து இரசாயன முறையில் அல்லாமல் இயந்திர முறையில் பிரிக்கப்படத்தக்கதாக உள்ளதோ, அத்தகைய உதிரிப்பாகத்திற்கு மட்டுமே மேற்படிச் சலுகை கிடைக்க வேண்டுமென்பதே அரசின் விருப்பமாகும். சென்னை அரசுக்கும்—ஆர். எம். கிருஷ்ணசாமி நாயுடுக்கும் நடைபெற்ற வழக்கில் (26 எஸ்.டி.சி. 42), தலைமை நீதி மன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது:—

"ஓர் உதிரிப் பாகம் இரசாயன பரிசோதனை மூலமோ அல்லது வேறு பரிசோதனை மூலமோ, மேற்படிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலை நிறைவு பெற்ற ஒரு பொரு ளின் உதிரிப் பாகமாக அடையாளம் கண்டு கொள்ளத்தக்கதாக

* 28—8—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.